# வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்

## (துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு)

## பதவி வெற்றிடம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் குடியுரிமையினைக் கொண்டுள்ள, அத்துடன் பின்வரும் பதவிக்கான உரிய தகைமைகளையும் அனுபவத்தையும் கொண்டுள்ள பொருத்தமான **ஆண் பரீட்சார்த்தி** ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

## முகாமைத்துவ உதவியாளர் பதவி (காசாளர்) – எம்.ஏ 1-2, தரம் III (வெற்றிடம் 01) – ஆண்

**<u>வெளிவாரிப் பரீட்சார்த்திகள்</u>** **<u>கல்வித் தகைமைகள்</u>:**

பின்வரும் பாடங்கள் உள்ளடங்கலாக நான்கு திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறுபாடங்களில் க.பொ.த. (சா/த) பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல்,

I. சிங்களம் / தமிழ்
II. கணிதம்

க.பொ.த. (உ/த) பரீட்சையில் மூன்று பாடங்களில் (பொது வினாப்பத்திரத்தை விட) சித்தியெய்தியிருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்:** எம்.ஏ. 1-2- 2016- ரூபா (27,910- 10× 300-7× 350- 12×600-12×710-49,080).

திருத்தப்பட்ட சம்பளத்திற்கு அமைவாக, தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்தி 2023/01/01 ஆம் திகதியிலுள்ளவாறு ரூபா. 27,910/- ஆகவுள்ள (எம்.ஏ. 1:2) தரம் III வகுதியின் ஆரம்பப் படிநிலையில் அமர்த்தப்படுவார்.

இச்சம்பளத்திற்கு மேலதிகமாக, அரசாங்கத்திற்கு உடமையான தொழில்முயற்சிகளுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சகல படிகளும் பின்வரும் திட்டவட்டமான படிகளும் செலுத்தப்படும்.

1. 5000/- ரூபா கொண்ட இடர் படி
2. 1000/- ரூபா கொண்ட தொலைபேசிப் படி

**வயதெல்லை** 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரிப் பரீட்சார்த்திகளுக்கு மேல் வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறை** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை ஒன்றின் மூலம்

**தகுதிகாண் காலப்பகுதி** 03 வருடங்கள்

**பதவிக்கான பொது நிபந்தனைகள்** தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரியானவர் இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் (CSC) பெயரில் 15, 000/- ரூபா கொண்ட மீளளிக்கத்தக்க பிணைய வைப்பொன்றை இடுமாறு கேட்டுக்கொள்ளப்படுவார்.

**காசாளர் பதவிக்கான பொறுப்புக்கள்**

- 150,000/- ரூபா கொண்ட நாளாந்த சில்லறைக் காசுக் கட்டுநிதியைக் கையாளுதல்.
- கணனி முறைமையில் தரவுகளை பதிவுசெய்தலும் சில்லறைக் காசுக் கொடுப்பனவையும் தற்காலிக முற்பணங்களையும் இற்றைப்படுத்துதலும்.
- சில்லறைக் காசேட்டினைப் பேணுதல்.
- உரிய அலுவலர் குழாத்தினருக்கு / உத்தியோகத்தர்களுக்கு ஊதியங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுச் சீட்டுக்களை விநியோகித்தல்.
- சரக்குக் கையாள்கைத் திணைக்களத்திற்கு முற்பணக் கொடுப்பனவுகளைச் செய்தல் மற்றும் மேற்படி கொடுப்பனவுகள் தொடர்பான கொடுப்பனவுப் பணவுறுதிச் சீட்டுக்களைத் தயாரித்தல்.
- காசாளர் (இறைவரி) இல்லாத போது அவருக்காக பதிற்கடமையில் ஈடுபடுத்தல்.
- சில்லறைக் காசு பணவுறுதிச் சீட்டுக்கள், முற்பண பணவுறுதிச் சீட்டுக்கள் மற்றும் கொடுப்பனவு பணவுறுதிச் சீட்டுக்கள் போன்றவற்றை நிரப்புதலும் இலக்கமிடுதலும்.
- திணைக்களத் தலைவரால் குறித்தொதுக்கப்படும் வேறு ஏதேனும் கடமைகள்.

**இதர நன்மைகள்**

I. ஊழியர் சேமலாப நிதியம் (E.P.F) / ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (E.T.F.) நோக்கிய பங்களிப்பு.

II. உட்புற மற்றும் வெளிப்புற சிகிச்சைகளுக்கான சத்திரசிகிச்சை மற்றும் வைத்தியசாலைசார் காப்பீடு.

III. முழுமையான தனிநபர் விபத்துக் காப்புறுதிக் காப்பீடு.
IV. பயன்படுத்தப்படாத மருத்துவ விடுமுறைகளை காசாக்குதல்.
V. ஏற்புடையதான வருடாந்த மிகையூதியம்.
VI. சலுகை நியதிகளின் பேரில் அலுவலர் குழாத்துக் கடன்களும் வீடமைப்புக் கடன்களும்.
VII. சலுகை நியதிகளின் பேரில் வாகனக் கடன்கள்.

**பொது அறிவுறுத்தல்கள்**

- பிறப்புச் சான்றிதழ், உரிய ஏனைய சான்றிதழ்கள் மற்றும் உறவுமுறை சாராத இரு தொடர்பாளர்களின் முகவரிகள் என்பவற்றுடன் சேர்த்து உண்மைப் பிரதியென விண்ணப்பதாரியினால் சான்றுப்படுத்தப்பட்ட கல்வி / தொழில் சான்றிதழ்களின் பிரதிகளுடன் ஒன்றிணைந்த சகல விண்ணப்பங்களும் **2023 ஓகஸ்ட் 14** ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனத்தின் (CSCL இன்) தவிசாளருக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

- தயவுசெய்து விண்ணப்பிக்கும் பதவியை உங்களின் விண்ணப்பத்திலும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையிலும் குறிப்பிடுக.
- அரச துறை நிறுவனங்களின் ஊழியர்களின் விண்ணப்பங்களானவை உரிய நிறுவனத் தலைவர்களிற்கூடாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
- காலம் பிந்திய மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.
- நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் குழுவொன்றின் மூலம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையொன்றில் விண்ணப்பதாரிகள் மதிப்பிடப்படுவர் என்பதை தயவுகூர்ந்து கவனத்திற் கொள்க.

மேற்போந்த தேவைப்பாடுகளுடன் இணக்கமற்றிருத்தலானது விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதற்கு வழிகோலும். எவ்வழியிலும் செல்வாக்கைப் பிரயோகித்தலானது தகைமையிழப்பாக அமையும்.

---

**தவிசாளர்,**

**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம்,**

**இல: 27, MICH கட்டடம்,**

**சேர் ராஷிக் பரீட் மாவத்தை (பிறிஸ்ரல் வீதி)**

**கொழும்பு 01.**

**மேலதிக விபரங்களுக்கு - (+94) 011 2 328 772, விரிவு 258 – மனித வளப் பிரிவு**

திகதி: 2023.07.31